# பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 7 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை: மத்திய மந்திரிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



**சென்னை, நவ.21**

**பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள, 7 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, மு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.**

மத்திய வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது:

14 இந்திய மீனவர்கள் (7 மீனவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்) குஜராத்தின் போர்பந்தரில் இருந்து 2 எந்திரப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்றபோது, கடந்த ஜனவரி 3ந் தேதியன்று பாகிஸ்தான் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு 10 மாதங்கள் முடிவடைந்துவிட்டன. இந்த நிலையில், மீனவர்களின் தற்போதைய நிலை குறித்தோ, அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் குறித்தோ எவ்விதத் தகவலும் இல்லை.

மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக நீண்டகாலமாக நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது. பொருளீட்டும் அந்த மீனவர்கள் இல்லாததால் அவர்களை சார்ந்துள்ள குடும்ப உறுப்பினர்கள் மிகுந்த மனவே தனையுடன் உள்ளனர்.

பாகிஸ்தான் கடற்படையினரால் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டு உள்ள நிலையில், மனிதாபிமான அடிப்படையில் அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடி எந்திரப் படகுகளையும் விடுவிக்க உறுதியான தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கத்திக்குத்தில் கொலை செய்யப்பட்ட அரசு பள்ளி ஆசிரியை குடும்பத்தினருக்கு ரூ.5 லட்சம் நிவாரணம்: முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, நவ.21**

**கத்திக்குத்தில் கொலை செய்யப்பட்ட அரசு பள்ளி ஆசிரியை குடும்பத்தினருக்கு ரூ.5 லட்சம் நிவாரணம் அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தஞ்சைமாவட்டம்பட்டுக்கோட்டை வட்டம் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளியில் தற்காலிக பட்டதாரி தமிழ் ஆசிரியையாக பணிபுரிந்து வந்த ரமணி பள்ளி வளாகத்தில் இருந்தபோது, மதன்குமார் என்ற நபரால் கத்தியால் குத்தப்பட்டு பலத்த காயமடைந்து, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் உடனடியாக உயர்கல்வித்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்களை உயிரிழந்த ஆசிரியை குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்க அனுப்பி வைத்தேன்.

பள்ளி ஆசிரியை கொலை செய்யப் பட்டுள்ள இந்தச் சம்பவமானது மிகவும் மிருகத்தனமானது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு அவர்மீது வழக்கு பதியப்பட்டுள்ளது. வழக்கின் விசாரணை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு குற்றவாளிக்கு விரைவில் சட்டப்படி தண்டனை பெற்றுத் தரப்படும்.

கிராமப்புறப் பகுதியில் கல்விப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட ரமணியின் உயிரிழப்பு பள்ளிக்கல்வி துறைக்கும், சக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

ரமணியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள், சக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, ரமணியின் குடும்பத்தினருக்கு ரூ.5 லட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



ஆசிரியை ரமணியின் உடலுக்கு அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

### அமைச்சர்கள் அஞ்சலி

ஆசிரியை ரமணியின் உடல் அவரது சொந்த ஊரான சின்னைமனைக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு பல்வேறு தரப்பினர் அஞ்சலி செலுத்தினர். அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி. செழியன் ஆகியோர் நேரில் சென்று ரமணியின் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். மேலும் ரமணியின் பெற்றோருக்கு ஆறுதல் கூறினர்.

இதையடுத்து அமைச்சர்கள் பள்ளிக்கு சென்று சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிருபர்களிடம் கூறும்போது, 'நடக்கக்கூடாத ஒரு சம்பவம் நடந்து இருக்கிறது. வேதனைக்குரிய நாளாக இன்றைய நாள்(அதாவது நேற்று) அமைந்து விட்டது.

மீண்டும் பள்ளிக்கு வரும்போது பிள்ளைகளுக்கு பயஉணர்வு இருக்கக்கூடாது என்பதற்காக உடனடியாக இந்த வாரம் முழுவதும் பள்ளிக்கு விடுமுறை விட சொல்லி இருக்கிறேன். 25ந் தேதி(திங்கட்கிழமை)பிள்ளைகளுக்கு மட்டுமின்றி ஆசிரியர்களுக்கும் ஒரு கவுன்சிலிங் வழங்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன். ஆசிரியர்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக அரசு ஊழியர்கள் பாதுகாப்பு சட்டத்தை வலுப்படுத்த சட்டத்துறையில் பேசி நல்ல நடவடிக்கை முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் மருத்துவத்துறையின் தரம் உயர்ந்திருப்பதற்கு மத்திய அரசு வழங்கிய விருதுகளே சாட்சி: எடப்பாடிக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலடி

**சென்னை, நவ.21**

**தமிழகத்தில் மருத்துவத்துறையின் தரம் உயர்ந்திருப்பதற்கு, மத்திய அரசு வழங்கிய விருதுகளே சாட்சி என்று எடப்பாடி பழனி சாமியின் கருத்துக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலடி தந்துள்ளார்.**

தி.மு.க. ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை, மக்களின் உயிர் காக்கும் துறையா? அல்லது மக்களின் உயிரைப் பறிக்கும் துறையா? என்ற சந்தேகம் எழுந்திருப்பதாக அ.தி. மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்திருந்தார். இதற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளித்து வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்த ஆட்சி, மருத்துவ துறையில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் நிறைவேற்றி சாதனை படைத்து வருவது மக்களுக்கு புரிகிறது.

சிலருக்கு புரிய வேண்டும் என்பதற்காக மக்கள் நல்வாழ்வுத்துறை சாதனை பட்டியலை மீண்டும் நினைவு கூறுகிறேன். மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டம், இதயம் காப்போம் திட்டம், சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம், பாதம் பாதுகாப்போம் திட்டம், தொழிலாளர் தேடி மருத்துவம், மக்களைத்தேடி ஆய்வக திட்டம், நடப்போம் நலம் பெறுவோம் திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம்.

மேலும், மருத்துவ கட்டமைப்புகள், மருத்துவ உபகரணங்கள், மருத்துவ பணி நியமனங்கள் என்று சொன்னால் பட்டியல் நீளும். மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையில் பாராட்டும், விருதும் வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது உலக அளவில் உச்சபட்ச அங்கீகாரம் என்பதை எடப்பாடி பழனிசாமி அறிந்திருப்பாரா? அண்ணா தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட மக்கள் இன்னல்களை பட்டியலிட்டால் ஆயிரம் பக்கம் கொண்ட தனிப் புத்தகமே போடலாம்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் மருத்துவத்துறை சேவை, தரம் உயர்ந்துள்ளது என்பதற்கு மத்திய அரசு வாரி வழங்கி உள்ள விருதுகளே சாட்சி. தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு இதுவரை பெற்ற விருதுகளின் எண்ணிக்கை 614, இதில், தி.மு.க. ஆட்சியில் பொறுப்பேற்ற பிறகு பெற்ற விருதுகளின் எண்ணிக்கை 545.

அதேபோல் மகப்பேறு துறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ். இதில், தமிழகம் இதுவரை பெற்ற விருதுகளின் எண்ணிக்கை 84, தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பெற்ற விருதுகளின் எண்ணிக்கை 55. இவைதான், மக்கள் விரோத ஆட்சிக்கும், மக்கள் நலன் விரும்பும் ஆட்சிக்கும் உள்ள வேறுபாடு.

தற்போது, அரசு ஆஸ்பத்திரிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. அரசியலுக்காக ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும் அரசு மருத்துவ சேவையை குறை கூறி குளிர்காய நினைக்காதீர்கள். எதிர்க்கட்சி தலைவர் என்பதை உணராமல் அரசியல் காழ்ப்புணர்ச்சியை மட்டுமே மனதில் கொண்டு அறிக்கை வெளியிடுவதன் காரணமாக எடப்பாடி பழனிசாமி, எரிச்சல் சாமியாக மக்களுக்கு காட்சியளிக்கிறார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


## ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025

CIN : U65900DL2020PLC366027

### ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 29.11.2024 அன்று மாலை 3:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஏலத்தில் பங்கேற்கலாம்.

| கிளை | கணக்கு எண் | கணக்கு வைத்திருப்பவர் பெயர் | தந்தை/ மனைவி/கணவன் பெயர் | முகவரி | கணக்கு துவக்க தேதி | செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|---|
| சென்னை | 104142510896 | பிரீத்தி எஸ் | த/பெ. ஸ்ரீதர் | 78, திருவீதி அம்மன் கோவில் தெரு, வில்லிவாக்கம் எஸ்ஓ, திருவள்ளூர், சென்னை, தமிழ்நாடு – 600 049 | 18-07-2024 | 179,850.63 |
| சென்னை | 104142510642 | திவாகர் டி | த/பெ. தேவநந்தன் பிசி | 31 பி, சந்திர பிரபு காலனி, பொன்னியம்மன் மேடு, திருவள்ளூர், தமிழ்நாடு 600 110 | 18-05-2024 | 207,066.59 |
| சென்னை | 104142510783 | சங்கீதா, க/பெ. தினேஷ் குமார் | த/பெ. வில்லாளன் | 5 133, 116வது தெரு, கொடுங்கையூர், முத்தமிழ் நகர், சென்னை, தமிழ்நாடு 600 118 | 18-06-2024 | 76,861.28 |
| சென்னை | 104142511104 | சங்கீதா, க/பெ. தினேஷ் குமார் | த/பெ. வில்லாளன் | 5 133, 116வது தெரு, கொடுங்கையூர், முத்தமிழ் நகர், சென்னை, தமிழ்நாடு 600 118 | 18-09-2024 | 173,511.10 |

**ஏல தேதி 29.11.2024 அன்று மாலை 3.00 மணி**

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.**


# வருங்கால வைப்புநிதி திட்டத்தில் அதிக உறுப்பினர்கள் பட்டியலில் தமிழகத்துக்கு 3வது இடம்

**சென்னை, நவ.21**

**வருங்கால வைப்புநிதி திட்டத்தில் அதிக உறுப்பினர்கள் சேர்ப்பு பட்டியலில் தமிழகம் 3வது இடத்தில் உள்ளது.**

தொழிலாளர்கள் ஓய்வு காலத்தில் தங்களது வாழ்வாதார நிதி தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் விதமாக மத்திய அரசு 1952ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி திட்டத்தை அமல்படுத்தியது.

இந்த திட்டத்தின்படி, தொழிலாளர்கள் பணியாற்றும் காலத்தில் மாதந்தோறும் சம்பளத்தில் பிடித்தம் செய்யும் தொகை, அவர்களது வைப்பு நிதி கணக்கில் செலுத்தப்படுகிறது.

தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனம் சார்பிலும் குறிப்பிட்ட தொகை செலுத்தப்படுகிறது. தொழிலாளர்கள் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களது வைப்பு நிதியில் சேமிக்கப்பட்ட சேமிப்பு தொகை வட்டியுடன் வழங்கப்படுகிறது.

பணி ஓய்வு பெற்றவர்கள் தங்களது முதுமை காலத்தில் மருத்துவம், உணவு உள்பட பல்வேறு பொருளாதார தேவைகளுக்காக யாரையும் சார்ந்து இருக்காமல் சொந்த காலில் நிற்பதற்கு இது துணையாக இருக்கிறது.

இந்தியாவை போன்று பல்வேறு வளரும் நாடுகளிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தியாவில் கடந்த ஜூலை மாதம் 21 ந் தேதி வரை, மாநிலங்கள் வாரியாக தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் உறுப்பினர்கள் எத்தனை பேர் உள்ளனர்? என்ற விவரத்தை மத்திய அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் வெளியிட்டு உள்ளது.அதன்படி நாடு முழுவதும் 7 கோடியே 42 லட்சத்து 19 ஆயிரத்து 423 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

அதில் ஒரு கோடியே 55 லட்சத்து 16 ஆயிரத்து 398 பேரை பெற்று மராட்டியம் முதல் இடத்தில் உள்ளது. 89 லட்சத்து 5 ஆயிரத்து 634 பேரை பெற்று கர்நாடகம் 2வது இடத்திலும், 77 லட்சத்து 80 ஆயிரத்து 311 பேரை பெற்று தமிழகம் 3வது இடத்திலும் உள்ளன.

49 லட்சத்து 21 ஆயிரத்து 716 பேரை பெற்று குஜராத் 4வது இடத்திலும், கேரளாவில் 14 லட்சத்து 32 ஆயிரத்து 446 பேரும், புதுச்சேரியில் ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 773 பேரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

மிகவும் குறைவாக லட்சத்தீவில் வெறும் 46 பேர் மட்டுமே தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



காஞ்சிபுரம் தெற்கு பகுதி நாராயண பாளைய தெரு பகுதியில் உள்ள முத்து செட்டியார் நகராட்சி பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல் சிறப்பு முகாமை அண்ணா தி.மு.க. மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி. சோமசுந்தரம் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது அனைத்துலக எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் காஞ்சி பன்னீர்செல்வம், தெற்கு பகுதி செயலாளர் கோல்டு ரவி, மாவட்ட கைத்தறி பிரிவு செயலாளர் வில்வபதி, வட்ட செயலாளர் அம்மா பாலு, பொருளாளர் முருகவேல் மற்றும் நிர்வாகிகள் தாமோதரன், செல்வராஜ், சூரியகாந்தி, மாணிக்கம், குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.


## ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்

SHRIRAM Finance

(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)

Corporate Identity No. (CIN) : L65191TN1979PLC007874

பதிவு அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், மனை எண் 14ஏ, சவுத் பேஸ், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032, தமிழ்நாடு, இந்தியா

Tel No.: +91 44 4852 4666 Fax: +91 44 4852 5666

Website: www.shriramfinance.in Email id : secretarial@shriramfinance.in

### தபால் வாக்கு அறிவிப்பு மற்றும் மின்னணு – வாக்களிப்பு தகவல்

கம்பெனிகள் சட்டம், 2013ன் ("சட்டம்") பிரிவு 108, பிரிவு 110 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிமுறைகள், கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்தப்பட்ட விதிகள், 2014 ('விதிகள்'), விதிமுறை 20 மற்றும் விதி 22 (தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டப்பூர்வ திருத்தங்கள் அல்லது அதன் மறு அமலாக்கம் உட்பட), செக்யூரிட்டீஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015ன் (பட்டியல் கடமைகள்) ஒழுங்குமுறை 44 மற்றும் இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செக்ரட்டரீஸ் ஆப் இந்தியா ("SS–2") வழங்கிய பொதுக் கூட்டங்கள் மீதான செயலக தரநிலைகள் மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (`எம்சிஏ') வழங்கிய பொது சுற்றறிக்கைகள் எண்கள். ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட 17/2020, செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 09/2024 உட்பட பிற தொடர்புடைய சுற்றறிக்கைகள் (இனிமேல் கூட்டாக "எம்சிஏ சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றின்படி, **நவம்பர் 15, 2024** தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பின்வரும் தீர்மானங்களை பரிவர்த்தனை செய்ய தொலைதூர மின்னணு வாக்களிப்பு செயல்முறை ('தொலைதூர மின்–வாக்களிப்பு') மூலம் நிறுவனத்தின் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுதல் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ.எண். | தீர்மானத்தின் வகை | விவரங்கள் |
|---|---|---|
| 1 | சிறப்பு தீர்மானம் | குழு மூலம் தனியார் ஒதுக்கீடு அடிப்படையில் கடன் பத்திரங்களை வெளியிடுவதற்கான வரம்பை புதுப்பித்தல் |
| 2 | சாதாரண தீர்மானம் | கம்பெனியின் சம பங்குகளை துணைப் பிரிவாக/பிரித்தல் |
| 3 | சாதாரண தீர்மானம் | கம்பெனியின் மெமோராண்டம் ஆஃப் அசோசியேஷனின் மூலதன விதியை (பிரிவு V) மாற்றுதல் |

இது சம்பந்தமாக, பின்வரும் விவரங்களை நாங்கள் வழங்குகிறோம்.

a) மின்னஞ்சல் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பும் பணி **புதன்கிழமை நவம்பர் 20, 2024** அன்று நிறைவு பெற்றுள்ளது.

b) **வெள்ளிக்கிழமை, நவம்பர் 15, 2024 (கட்–ஆப்தேதி)** அன்று நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ('என்எஸ்டிஎல்') மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ('சிடிஎஸ்எல்')('டெபாசிட்டரிகள்')டில் உள்ள நன்மை பயக்கும் உரிமையாளர்கள் தரவு மற்றும் கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர் ('ஆர்டிஏ') இன்டகிரேட்டட் ரெஜிஸ்ட்ரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டில் உள்ள பதிவேட்டில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவிப்பை கம்பெனி மின்னஞ்சல் மூலம் அனுப்பி உள்ளது. எம்சிஏ சுற்றறிக்கைகளின்படி உறுப்பினர்களுக்கு காகித வடிவில் அறிவிப்பை அனுப்பும் பணி கைவிடப்பட்டுள்ளது.

c) கட்–ஆப் தேதி அன்று உறுப்பினர்களின் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்ட ஒரு நபர், மேலே குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக தொலைதூர மின்னணு வாக்களிப்பு செயல்முறை மூலம் வாக்களிக்க உரிமை உண்டு. கட்ஆப் தேதியில் உறுப்பினராக இல்லாத ஒருவர், இந்த விளம்பரத்தை தகவல் நோக்கத்திற்காக மட்டுமே கருத வேண்டும்.

d) இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களின் மீதும் வாக்களிப்பதற்காக அதன் உறுப்பினர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதியை வழங்குவதற்கு சிடிஎஸ்எல்–ன் சேவைகளை கம்பெனி ஈடுபடுத்தியுள்ளது.

e) உள்நுழைவு ஐடி சான்றுகளுடன் தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு தொடர்பான செயல்முறை விவரங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் வழங்கப்படுகின்றன.

f) தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் மூலம் டெபாசிட்டரியுடன் மின்னணு முறையில் வைத்திருப்பவர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்ய/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆர்டிஏ வசம் காகித வடிவில் வைத்திருப்பவர்கள் அவர்களின் போலியோ/டிமேட் கணக்கு எண் விவரங்களை einward@integratedindia.inக்கு மின்னஞ்சல் அனுப்பி உள்நுழைவு முகவரி, மின்னணு வாக்களிப்புக்கான அறிவிப்பையும், நடைமுறையையும் பெறலாம். புதுப்பித்த பிறகு, தபால் வாக்கு அறிவிப்பின் மின்னணு நகல் மின்னஞ்சல் மூலம் ஆர்டிஏ–வினால் அனுப்பப்படும்.

g) மின்னணு முறையில் வாக்களிப்பு துவங்கும் தேதி மற்றும் நேரம் : **வியாழக்கிழமை, நவம்பர் 21, 2024 (இந்திய நேரப்படி 9.00 மணி)**

h) மின்னணு முறையில் வாக்களிப்பு முடியும் தேதி மற்றும் நேரம் : **வெள்ளிக்கிழமை, டிசம்பர் 20, 2024 (இந்திய நேரப்படி 17.00 மணி)**

i) **வெள்ளிக்கிழமை, டிசம்பர் 20, 2024** அன்று இந்திய நேரப்படி 17.00 மணிக்கு பிறகு தொலைதூர மின்னணு வாக்களிக்கும் தளம் சிடிஎஸ்எல்-ஆல் முடக்கப்படும். உறுப்பினர்கள் தங்கள் ஒப்புதல் அல்லது மறுப்புகளை தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி மூலம் மட்டுமே தெரிவிக்க வேண்டும். தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்த உறுப்பினர் அதனைத் தொடர்ந்து மாற்றி மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்.

j) அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.shriramfinance.in, ஸ்டாக் எக்சேஞ்சஸ் இணையதளம் பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com, நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் www.evoting.nsdl.com மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட்டின் www.evotingindia.com–ல் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

k) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான குறைகளை தீர்ப்பதற்கு அணுக வேண்டிய விவரம், கம்பெனி அதிகாரி திருமதி. ஷைலா எம், கார்ப்பரேட் அலுவலகம் – வொக்கார்ட் டவர்ஸ், லெவல்–2, கிழக்கு விங், சி–2, ஜி பிளாக், பாந்த்ரா–குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை 400 051. தொலைபேசி எண்: +91 –022–40959595 (சனி மற்றும் ஞாயிறு தவிர), மின்னஞ்சல் முகவரி : secretarial@shriramfinance.in

l) தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடர்பாக விவரங்களை அறிந்து கொள்ள தயவு செய்து அறிவிப்பை பார்க்கவும். மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியுடன் தொடர்புடைய அனைத்து குறைகளையும் திரு. ராகேஷ் தல்வி, மூத்த மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25. மாடி, மராத்தான் ப்யூச்சர்க்ஸ், மபத்லால் மில் காம்புவுண்ட், என்.எம். ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை– 400013 என்ற முகவரியில் தெரிவிக்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com க்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது கட்டணமில்லா எண் 1800 21 09911ல் அழைக்கலாம்.

m) சட்ட விதிகள் மற்றும் எம்சிஏ சுற்றறிக்கைகளுக்கு இணங்க மின்னணு வாக்குப்பதிவு நேர்மையாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெற எஸ்பிஎன்பி அன்ட் அசோசியேட்ஸ், சென்னை நிறுவனத்தின் திரு. பி. ஸ்ரீராம் (உறுப்பினர் எண். எப்சிஎஸ் 4862), பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் (சிபி எண். 3310) அவர்களை ஆராய்வாளராக இயக்குனர்கள் குழு நியமனம் செய்துள்ளது அவர் பங்கேற்காத நிலையில் திருமதி. நித்யா பசுபதி (உறுப்பினர் எண்.எப்சிஎஸ் 10601), பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் (சிபி எண்.22562) அவர்களை நியமித்துள்ளது.

n) கம்பெனியின் கார்ப்பரேட் அலுவலகத்தில், ஆராய்வாளர் **திங்கட்கிழமை, டிசம்பர் 23, 2024 அன்று இந்திய நேரப்படி 17.00 மணிக்கு** அங்கீகரிக்கப்பட்ட இயக்குனர் அல்லது தலைவரால் நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நபரிடம் தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு முடிவுகளை அறிவித்து அறிக்கையை சமர்ப்பிப்பார். தொலைதூர மின்னணு வாக்களிப்பு முடிவுகள் மற்றும் ஆராய்வாளர் அறிக்கை கம்பெனியின் இணையதளம் www.shriramfinance.in மற்றும் CDSL–ன் www.evotingindia.com என்ற இணையதளத்திலும் கிடைக்கும். மேலும் கம்பெனியின் சம பங்குகள் / பத்திரங்கள் பட்டியலிடப்பட்டுள்ள பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் ஆகியவற்றிற்கும் தெரிவிக்கப்படும், தீர்மானங்கள் தேவையான பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்பட்டால் வாக்களிக்கும் காலத்தின் கடைசி தேதியில் அதாவது **வெள்ளிக்கிழமை, டிசம்பர் 20, 2024** அன்று நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
**ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்டுக்காக**
ஒப்பம்/–

இடம் : மும்பை
தேதி : நவம்பர் 20, 2024

U. பாலசுந்தரராவ்
கம்பெனி செயலாளர் & இணக்க அதிகாரி
உறுப்பினர் எண். எப்சிஎஸ் 12952



SOUTH INDIAN Bank

Regd. Office: SIB House, T. B. Road, Mission Quarters, Thrissur, Kerala - 680 001 Tel: +91-487-2420020
Fax: +91-487-2442021 E-mail: sibcorporate@sib.co.in
Website: www.southindianbank.com
Corporate Identity Number: L65191KL1929PLC001017

**திருவல்லிக்கேணி கிளை:** எண்.150, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-600 005 Ph: 044 2844 3300

### தங்க நகைகள் ஏல அறிவிப்பு

இதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தங்க நகை கடன் எண்ணுக்கான தங்க நகையை வாடிக்கையாளர் திரும்பிப் பெறாததால்/மீட்காததால், கீழ்க்கண்ட தங்க நகை பொது ஏலத்திற்காக **29ஆம் தேதி நவம்பர் மாதம், 2024 ஆம் வருடம் மாலை 3.00 மணியளவில் எங்களது திருவல்லிக்கேணி கிளையில் கொண்டு வரப்படுகிறது** என்பதனை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

| கடன் கணக்கு எண் | கடன்தாரர் பெயர் | கடன் தொகை | நகையின் எடை (கிராமில்) |
|---|---|---|---|
| 112.653.74743 | S.உமா | ₹ 27,000/- | 14.8 |

**எந்தவித காரணமும் கூறாமல் மேலே குறிப்பிட்டுள்ள தங்க நகை ஏலத்தினை குறித்து இறுதி முடிவு எடுக்கவும்/ரத்து செய்யவும் கீழே கையெழுத்திட்டுள்ள அதிகாரிக்கு முழு உரிமை உள்ளது என்பதையும் தெரிவித்து கொள்கிறோம்.**

**தேதி: 21.11.2024** **(மேல் அதிகாரி / வங்கி கிளை மேலாளர்)**
**இடம்: சென்னை** Taxes as Applicable **(சௌத் இந்தியன் வங்கி)**



## NOTICE

Notice is hereby given that the share certificate Nos. 6011, 309863, 393492, 479632 (Folio no. 76571929) for 150 shares bearing distinctive No(s). **292311 - 292335, 140211056 - 140211080, 582513295 - 582513344 and 622497957 - 622498006** standing in the name(s) of Kala Ragavan in the books of M/s. Larsen & Toubro Limited, has / have been lost / misplaced / destroyed and the undersigned has / have applied to the Company for issue of duplicate share certificate(s) in lieu thereof. Any person(s) who has / have claim(s) on the said shares should lodge such claim(s) with the Company's Registrars and Transfer Agents viz KFin Technologies Limited, Selenium Tower-B, Plot 31-32, Gachibowli, Financial District, Hyderabad - 500032, TELENGANA, Tel.: 040-67162222 within 15 days from the date of this notice failing which the Company will proceed to issue duplicate share certificate(s) in respect of the said shares.

Date : 20.11.2024 Name(s) of the shareholder(s)
Place : Chennai Kala Ragavan



## பொது ஏல அறிவிப்பு

**28வது உதவி நீதிபதி**
**சிட்டி சிவில் கோர்ட்டு, சென்னை– 600 104**
**E.P.No. 3826 of 2015**
**in**
**ACP No. 11 of 2015**

M/s. T. Jayaraman ...மனுதாரர்
Vs
D.Sakthivel and others ...மனுதாரர்fs;
To
1) D.Sakthivel,
S/o.Late Devarajan D1
2) D.Murugan,
S/o. Late Devarajan D2
Both JD's Residing at: New No.41, Old No.44,
Now Present No.50/41, Baroda Street,
West Mambalam, Chennai–600 033

மேற்கண்ட E.P. மனுவின் 28வது உதவி நீதிபதி சென்னை சிட்டி சிவில் கோர்ட்டு 04.12.2024 அன்று எதிர்மனுதாரரின் கிழ்கண்ட சொத்தை மனுதாரரின் கடனை அடைப்பதற்கு பொது ஏல விற்பனையில் விற்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கீழ்கண்ட சொத்தை ஏல விற்பனை 04.12.2024 அன்று அன்று மாலை 4 மணிக்கு சிட்டி சிவில் கோர்ட்டு வளாகத்தில் நடைபெறும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**Schadule (சொத்து விபரம்)**

All that piece and parcel of 2/3rd Undivided Share of land and Building bearing Old Door No.44, New No.41 (Present Door No.50/41) Baroda Street, West Mambalam, Chennai–600 033 comrpised in T S No.20 Block No.51, No. 109, Puliyur Village measuring an extent of 1656 sq ft measuring North to South on both side 69 feet, East to West on the Southern Side 23 Feet and on the Northern Side 25 feet in all measuring 1656 sq feet bounded on the

North by : House and Ground of Muthaiah Pillai
South by : Baroda Street
East by : Baroda Fourth Street Lane and
West by : Reddiar House and Ground

And situated within the Registration District of Chennai Central and in the Registration Sub District of Kodambakkam,

M/s. M.Durai Raj,
M.Ranganathan
Counsel for Degree Holder